ஞாலகுருவின் படைப்புக்கள்

# கருத்துப் புரட்சி - விளக்கம்

புரட்டாசி மாதம், இந்துமத ஆண்டு 43,73,125

“இந்துவேதக் கருத்துக்களை,
இந்துவேத வரலாறுகளை,
இந்துவேத வழி தயாரான
அருளாளர்களை, ...
... இந்து வேத வாழ்வியல்களை,
இந்து வேதத்திற்குரிய 48 வகைப்பட்ட
கோயில்களை, இந்து வேதத்திற்குரிய
48 வகைப்பட்ட கடவுள்களை ...
மக்களுக்கு ஏட்டறிவாகவும்,
பட்டறிவாகவும் வழங்குகின்ற
பணியைச் செய்கின்றது இந்துவேத
அருட்பணி விரிவாக்கத் திட்டம்.”



குவலய குருபீடம், குருதேவர்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

*43,73,125ஆம் ஆண்டின் புரட்டாசி மாத வெளியீடு*

**<u>தலைப்பு</u>:- கருத்துப் புரட்சி - விளக்கம்**

# <u>உள்ளுறை</u>

1. **“கருத்துப் புரட்சி”** - கண்டனூரைச் சேர்ந்த சித்தரடியானுக்கு குருதேவர் அவர்கள் 24-07-1992இல் விடுத்த மடல்.
2. **“கருத்துப் புரட்சியை அறிவிக்கும் முறை”** - தஞ்சையில் இருந்து செயல்பட்டிட்ட அருட்போர் வியூக நாயகத்திற்கு குருதேவர் 24-07-1992இல் விடுத்த நெடிய அஞ்சல்.
3. **“போற்றற்குரிய ஆற்றல்மிகு அருட்பணி விரிவாக்கத் திட்டம்”** - காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பசனைக் கூட்ட அமைப்பாளர் ஒருவருக்கு குருதேவர் அவர்கள் 10-08-1992இல் விடுத்த கருத்து விளக்க அஞ்சல் கட்டுரை.
4. **“நமது வாரிசுகளே அருட்பயிரின் நாற்றுப் பண்ணைகள் ...”** - மதுரைச் சித்தரடியார் இந்துவேதம் பரப்பும் நாயகத்திற்கு குருதேவர் அவர்கள் 28-08-1992இல் விடுத்த நெடிய விளக்க அஞ்சல்.
5. **“இந்துமதக் கோயில்களின் நிலை!”** - நமது கோயில்கள் ஏன் அருளை அநுபவப் பொருளாக மக்களுக்கு வழங்க வில்லை என்பதற்கான விளக்கம்.

ஓம்

# கருத்துப் புரட்சி

24-7-92,
அம்பத்தூர்.

அனுப்புதல்:-

அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
குமாரசாமித் தெரு, இரயில் நிலையம் அருகில்,
அம்பத்தூர், சென்னை - 53.

பெறுதல்:-

அருள்மிகு பதினெட்டாம்படிக் கருப்பர் சன்னிதானம்,
சித்தரடியார் இராம. நெல்லியான்,
5, திலகர் தெரு, கண்டனூர் - 623104.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் வாழ்த்தினால் யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும்.

2) தங்களுடைய 20ஆம் தேதி எழுதப்பட்ட அஞ்சலட்டை கிடைத்தது. குருதேவருக்குப் படித்துக் காட்டப்பட்டது.

3) நமது அகத்தியர் சன்னிதானம் மு. இராமானுசதாசு அவர்கள் நம்முடைய மூத்த சன்னிதானங்களுள் ஒருவர். அவரை நாம் பாதுகாத்தாக வேண்டும். ஆனால் அவருக்கும், அவரது குடும்பத்தார்களுக்கும் பல்வேறு வகையான பாதிப்புக்கள் ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டுக் கொண்டுள்ளன. ஆனால், அவரால் பல்வேறு

காரணங்களாலும், பொருளுலக அருளுலகத் தடைகளாலும் பரிகாரங்களைச் செய்து கொள்ள முடியவில்லை. மேலும், அவர் பேராற்றலோடும், துணிச்சலோடும் செயல்பட்டு அருளுலகில் பலவகையான எதிர்ப்புக்களையும், சிக்கல்களையும் பெற்றுள்ளார். இவற்றிலிருந்து அவர் விடுபட குருதேவரே தங்கள் வட்டாரத்திற்கு வர வேண்டும். நீங்கள் எல்லோரும் அவருக்காக நிறையப் பூசைகள் செய்ய வேண்டும். மேலும், அவரை அனுவசியமாக அருட்கணிப்பில் ஈடுபடுத்தக் கூடாது. அவரைப் பெரியவராக, உங்கள் வழிகாட்டியாக, வழித்துணையாக வைத்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை அவருக்கு நிறைய ஓய்வு தர வேண்டும்.

4) நீங்கள் எல்லோரும் (சோலைமலை, குருசாமி, ஐயப்பன், பூபதி) அவரவர்க்கென்று யாகசாலை தனித்தனியாக வட்டம், சதுரம், முக்கோணம், கண் வடிவம், ஐங்கோணம் என்று அமைத்து வாரத்தில் ஒரு நாளாவது யாகம் செய்து அருளூறு பூசனைப் பொருளை அவருக்கு எடுத்துச் சென்று தர வேண்டும். ஆனால், அவரை யாகத்திற்கு அழைக்கக் கூடாது. அவரது உடல் மிகவும் களைத்து, நொந்து, சோர்ந்து போய் உள்ளது. எனவே, அவரைப் பாதுகாத்தாக வேண்டும். அவருக்குத் தேவையான உதவிகளை நீங்கள் ஐவரும் செய்து கொடுக்க வேண்டும். மற்றும் நமது இயக்க, கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரும் உதவிகள் செய்யலாம். வாரத்தில் ஒருமுறையாவது கட்டாயமாக நிர்வாகக் குழுவை கூட்டி, அதற்கு அவரை அழைத்து அனைத்தையும் அவரிடம் கூறி அவரிடமிருந்து அறிவுரைகளும், பரிந்துரையும் பெற்றுச் செயல்பட வேண்டும். அவரைப் போன்ற தலைவர் கிடைக்க மாட்டார். எச்சரிக்கை.

5) எது வேண்டுமானாலும்; செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் என்று நிர்வாகக் குழு பொறுப்பில் உள்ளவர்கள் தலைமைப்பீடத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, பீடத் தாயத்து தங்களுக்கு

அனுப்புவதா? அல்லது வேறு யாருக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதை உடனேயே தெரிவியுங்கள். அருட்போரின் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டதால், நீங்கள் எல்லோரும் சுறுசுறுப்பாகவும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும்.

இரும்புக் கம்பியில் 1 முழம் அல்லது 2 முழம் உயரமுள்ள திரிசூலங்களை வசதி வாய்ப்புப் போல் நிறைய செய்து முக்கியமான கோயில்கள், ஊர்கள், வழிபாட்டுக்குரிய ஏரிக் கரைகள், ஆறுகள், காடுகள் முதலிய இடங்களில் 'அருட்போருக்கு அழைப்பு' என்று அறிவிப்புச் செய்து மந்திரங்கள் சொல்லி, முடிந்தால் யாகம் செய்து திரிசூலம் நடவும். அவற்றின் மேல் எலுமிச்சம்பழம், திருநீறு, குங்குமம், சந்தனம் பூசவும். உங்கள் வட்டாரத்தில் உள்ள எல்லா ஊர்களிலும் இத் திரிசூலத்தை நடவும். எந்த ஊரிலும் ஆள் கிடைக்க வில்லை என்று சொல்லக் கூடாது. ஏதேனும் ஒரு மரத்தடியில் திரிசூலம் நடலாம். அந்த மரத்தில் கையகலம் பட்டை எடுத்து விட்டு அதில் திருநீறு, குங்குமம், சந்தனம் பூசி; பூ போட்டு கும்பிடவும். அந்தந்த ஊர்களிலும் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றவும். முதலில் பசும்பொன்னூர் மாவட்டத்தில் ஏழு (7) இடங்களில் சித்தர் கருவூரார் அருட்கோட்டம் அமைத்து வாரத்தின் ஏழு நாட்களிலும் பூசை செய்வதற்கு ஏற்பாடு செய்யவும். அது நம் இயக்கத்தின் வளர்ச்சிக்குரியது.

6) தாங்கள் புதிதாகச் சந்திப்பவர்கள் மற்றும், உறுப்பினர்கள் எல்லோரையும் அவ்வப்போது 1 ரூபாய் அஞ்சல் வில்லைகள் (postal stamps) அனுப்பச் சொல்லவும். அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா மக்களைத் திரட்டவும், பொருள் திரட்டவும்; அருட்கணிப்பிற்காக சாதாரண மக்களிடம் ரூ. 25 முதல் ரூ. 108 வரை காணிக்கை பெறலாம் என்று ஆணையிட்டுள்ளார். எனவே, நிறைய அருட்கணிப்புக்களை அனுப்பவும்.

தாயத்து, முடிகயிறு, ஒற்றை உருத்திராக்கம் ஆகியனவற்றிற்கு மக்களின் ஏழ்மை நிலைக்கேற்றவாறு காணிக்கை பெற்றுக் கொண்டு வழங்கலாம். அருட்போருக்குரிய ஆணை வழங்கப்பட்டு விட்டதால் ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி எல்லோரையும் ஒற்றை உருத்திராக்கம் அணியச் சொல்லுங்கள். ஒற்றை உருத்திராக்கம்தான் இந்துமதத்தின் ஆட்சி மீட்சியையும், வளவளர்ச்சியையும் அடையச் செய்யும். இந்துமதத் துரோகிகளும், விரோதிகளும்தான் உருத்திராக்கத்தை இந்துக்கள் பயன்படுத்த முடியாமல் செய்து விட்டார்கள். எனவே, தாங்கள் நமது எதிரிகளைப் பற்றி விமரிசனம் செய்யாமல் உருத்திராக்கம் அணிந்து சென்றால் அனைத்து வகையான நன்மைகளும், பாதுகாப்புக்களும் கிடைக்கும் என்று மட்டுமே கூறிச் செயல்படுங்கள்.

7) எந்த ஊரானாலும் சரி, எந்தக் கோயிலானாலும் சரி; அங்குள்ள மந்திரவாதிகளாலோ, தேவ கணங்களாலோ நம்மவர்களை எதிர்க்க முடியாது. ஏனெனில், அண்டபேரண்டங்களிலிருந்து வந்துள்ள அருட்போருக்குரிய ஆத்தாள் தேவி உக அற நாயகியும், ஆத்தாள் தேவதேவியும், அருட்கோலம் பூண்டுள்ள ஆத்தாள் தேவி குருமாரியம்மனும், கருகுலத்தில் பதினெட்டுப் (18) பீடங்களிலும் எழுந்தருளியுள்ள பதினெட்டு (18) காளிகளும், தாத்தாக்கள் ஆத்தாக்களும் தலைமையேற்றுச் செயல்படத் துவங்கி விட்டார்கள். எனவே துணிந்து செயல்படுங்கள். ஆனால், உலகியலாக எந்த ஊர் மக்களிடையேயும் கருத்து மாறுபாடு கொள்ள வேண்டாம். நமது அறிக்கைகள், புத்தகங்கள் அனைத்தையும் வழங்கிடுங்கள்.

8) ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும், தெருவிலும், ஊரிலும் 18 பேர் கொண்ட மடாதிபதி குழு அமைக்க ஏற்பாடு செய்யுங்கள். அதாவது அறிவிக்கை எண் 7777தான் அருட்போரின் ஆயுதம், சாதனம், கருவி என்று அருளாட்சி நாயகம் அறிவித்து விட்டார். இதன்படி காலம் காலமாகக் கோயிலுக்குச் சென்று கும்பிட்டுக் கொண்டு

வரக்கூடிய ஏழை எளிய படிப்பறிவற்ற பாமரர்கள் கூட குருபீடத்திலிருந்து ரூ.11¼ காணிக்கை செலுத்தி சக்கரம் பெற்று; அதை உச்சந்தலை, இரு தோள்பட்டை, முதுகு, நெஞ்சு ஆகிய ஐந்து இடங்களில் வைத்து; ஒவ்வொரு இடத்திலும், அன்றுடப் பூசாமொழி புத்தகத்தில் உள்ள மூன்று காயந்திரியும், ஒரு கற்பூர சோதி மந்திரமும் (1. வாஞகி, 2. ஓம் பூர்வ 3. ஓம் சத்தியே, 4. கற்பூரம்) 1 முறை முதல் 8 முறை வரை ஓதினால் போதும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் மடாதிபதி, பீடாதிபதி, ... காமகோடிப் பீடம் வரையுள்ள எந்தப் பட்டமானாலும் சித்தியாகும். ஆனால், இந்த 18 பேர்களும் மடாதிபதி குழு என்ற பெயரில் ஒற்றுமையுடன் இருந்தால்தான் அவர்களில் ஒன்றிரண்டு பேர்களுக்காவது சீக்கிரம் சித்தியாகும்.

9) நம் ஆதரவாளர்கள், அல்லது ஆர்வலர்கள், அல்லது பாதிப்பாளர்கள்; முடிவெட்டுபவர்கள், சலவைத் தொழிலாளி, சிறிய கடை வைத்திருப்பவர்கள்; தங்கள் கடையில் உரிமையாளர் என்று போட்டு அதற்குக் கீழே காமகோடிப் பீடம், பரமாச்சாரியார், பெரியவாள், சித்தரடியார் என்று எழுதி அவர் பெயரைப் போட்டுக் கொள்ள வேண்டும். அதற்குக் கீழே பணிபுரிபவர்கள் என்று போட்டு ஏமகோடிப் பீடம், சோமகோடிப் பீடம், வாமகோடிப் பீடம், காமகோடிப் பீடம் என்று நான்கு அருட்பட்டங்களை எழுதி அவர்களுக்கு முறையே

- கடவுளாச்சாரியார், அரியவாள் - ஏமகோடிப் பீடம்
- தெய்வீகாச்சாரியார், சீரியவாள் - சோமகோடிப் பீடம்,
- தேவாச்சாரியார், வீரியவாள் - வாமகோடிப் பீடம்;

என்று போட்டு, சித்தரடியார் என்று போட்டு அவர்களுடைய பெயர் போட்டுக் கொள்வதன் மூலம் பதினெண்சித்தர் மடத்தின் அ.வி.தி. செயல்திட்டங்கள், கருத்துக்கள், கொள்கைகள், குறிக்கோள்கள் எல்லோருக்கும் புரியும். யாரும் பயப்படத் தேவையில்லை.

மேற்படி பெயர்ப் பலகையைப் பற்றி யார் வந்து விசாரித்தாலும்; குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரிய குருபீடம், பதினெண்சித்தர் மடம், அந்தணர் அண்ணல், **ஞானாச்சாரியார்**தான் இப்பட்டங்களை அருளினர் என்று கூறி முகவரியும், தொலைபேசி எண்ணும் கொடுத்து அவர்களைத் தொடர்பு கொள்ளச் சொல்லலாம். இதுதான் **கருத்துப் புரட்சி**. இந்துமதத் துரோகிகளும், விரோதிகளும் நம்மைச் சந்திக்கவும், சிந்திக்கவும் இதுதான் வழி.

**சிந்தியுங்கள், செயல்படுங்கள்.**

**குறிப்பு**:- இதை அனைவருக்கும் படித்துக் காட்டவும். முடிந்தால் சைக்ளொசுடைல் (Cyclostyle) அல்லது செராக்சு (Xerox) நகல்கள் எடுத்தோ அனைவருக்கும் கொடுக்கலாம்.

**சிந்தியுங்கள், செயலாக்குங்கள்.**

**நகல்கள் தயாரிப்பு**:- *தென்மண்டல நிர்வாகக் குழு, மதுரை.*

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்தில் எழுதி சைக்ளோசுடைல் (cyclostyle) செய்யப்பட்டதாக இருந்தது.//**

ஓம் குருவே துணை

# கருத்துப் புரட்சியை அறிவிக்கும் முறை

அம்பத்தூர்,
24-7-1992.

பெறுனர்:

கிழக்கு மண்டல சிறப்பு அமைப்பாளர்,
அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம்,
சித்தரடியார் சீ.மணி அவர்கள்;

1. இன்று இந்துமத ஆண்டு 43,73,093ஆம் ஆண்டு ஆக்ரோச ஆண்டு ஆடித் திங்கள் 9ஆம் நாள் வெள்ளிக்கிழமை முதல் '**அருட்போர் வியூக நாயகமாக**' அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா ஞானவேந்தர், ஞாலகுரு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் அருளாணை பெற்ற குருவாணையால் அறிவிக்கப்படுகிறார். இதுபோல் பல அருட்போர் வியூக நாயகங்கள் அறிவிக்கப்படுவார்கள். எனவே, தாங்கள் இந்த அருட்போர் வியூக நாயகப் பதவிக்குத் தகுதியுள்ளவர்களை பரிந்துரை செய்யலாம். அதற்குரிய உரிமையும் இதன் மூலம் வழங்கப்படுகிறது. எனவே, தாங்கள் முன்பை விட பன்மடங்கு சுறுசுறுப்போடு செயல்பட வேண்டும்.

2. அன்பு கூர்ந்து அதிகப் பொருட்செலவில்லாமல் 15 காசு விலையுள்ள அஞ்சலட்டையையே ஒன்றிரண்டு என்று சேர்த்துச் சேர்த்து

எழுதி தாங்கள் அருட்போர் வியூக நாயகமாக அறிவிக்கப்பட்டுள்ள செய்தியினை நாடு முழுவதும் உள்ள நம்மவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள். தங்களுக்கு உதவியாக பலரையும் அஞ்சலட்டை வாங்கித் தரச் சொல்லுங்கள். இதே நேரத்தில் வசதியுள்ளவர்களை ஒரு ரூபாய் விலையுள்ள அஞ்சல் தலை வாங்கித் தலைமைப்பீடம் அனுப்பக் கூறுங்கள்.

**குறிப்பு:-** இதேபோல் தாங்கள் எங்குச் சென்றாலும் போக்குவரத்துச் செலவை வாய்விட்டுக் கேட்டோ, வற்புறுத்தியோ பெற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் தாங்கள் செயல்பட்டிட்ட விதத்தையும் காட்ட முடியும்.

3. தாங்கள் காரைக்குடியில் உள்ள நிர்வாகக் குழுவினரைச் சந்தித்து ஊக்குவித்து உரிய விளக்கங்கள் பல புரிந்துள்ளதை அருளுலகத்தவர்களும், பொருளுலகத்தவர்களும் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

4. நமது காரைக்குடி அகத்தியர் அருட்கோட்டப் பொறுப்பாளர் அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் அவர்கள், அருட்போரிலும், அருளாட்சியிலும் மிகப் பெரிய பங்கை ஏற்க வேண்டியவர். ஆனால், அவர் உடம்பில் மிகப் பெரிய பாதிப்புக்கள் ஏற்பட்டு விட்டன. மேலும், அவருடைய அளப்பரிய பற்றுக்கும் பாசத்திற்கும் உரிய குடும்பத்தார்களும் மிகப் பெரிய அளவில் அருளுலகப் பொருளுலகப் பாதிப்புக்களைப் பெற்று விட்டார்கள். எனவே, நாம்தான் அவரைப் பாதுகாக்க வேண்டும். **எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை**.

இதன்படி எடுக்கப் பட வேண்டிய செயலாக்கங்கள்:-

i. அகத்தியர் சன்னிதானத்தை சுற்றுப்பயணங்களிலும், பூசையிலும், அ.வி.தி. பணியிலும் அதிகமாக ஈடுபடாமல் பாதுகாத்திடல் வேண்டும்.

ii. அகத்தியரை வாரா வாரம் நம்மவர்கள் வரவழைத்து அல்லது இருக்கும் இடம் சென்று வாரப் பூசைகளை நிகழ்த்தியேயாக வேண்டும்.

iii. அநுபவமிக்க அகத்தியர் சன்னிதானத்தை கலந்தே எல்லாக் காரியங்களையும் செய்தாக வேண்டும்.

iv. அவருடைய அருட்கோட்டம் அவர் மட்டும் தவத்திலும், பூசையிலும் இருப்பதற்குப் பயன்பட வேண்டும்.

5. உடனடியாக பசும்பொன் மாவட்டத்திற்குள் வட்டம், சதுரம், ஐங்கோணம், கண் வடிவம், முக்கோணம் எனும் ஐந்து யாகசாலைகளும், நெல்லியான் (இவர் வீட்டில் ஏற்கனவே யாகம் இருக்கிறது), சோலைமலை, ஐயப்பன், குருசாமி, பூபதி (இப்போது பூசை செய்த காலியிடத்தில் அமைக்க வேண்டும்) என்று ஐவரும் சித்தர் கருவூரர் அருட்கோட்டம் 1, 2, 3, 4, 5 என்று பெயரிட்டு செயல்பட வேண்டும். இதுதான் அருட்போர் ஆயத்தப் பணி துவங்கி விட்டதின் முதல் வியூகம்.

6. அருட்போர் வியூக நாயகமாகிய தாங்கள் உடனடியாக நான்கு மண்டலங்களையும் இந்த சிவஞகப்பட்ட வடிவமைப்புக்களை உடைய யாகசாலைகளை உடைய அருட்கோட்டங்கள் உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதற்காக தொடர்ந்து அஞ்சலட்டை எழுதுங்கள். முடிந்தால் நேரில் சென்று வாருங்கள்.

**<u>குறிப்பு</u>:-** இந்த அருட்போர் வியூகத்தின் விரிவாக்கமாகவே ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் படிப்படியாக தங்களது முயற்சியால் இந்த 5 வகை யாகசாலை உடைய சித்தர் கருவூரர் அருட்கோட்டங்கள் உருவாக்கப் பட வேண்டும், உருவாக்கப் பட வேண்டும், உருவாக்கப் பட வேண்டும், உருவாக்கப் பட்டேயாக வேண்டும்.

**<u>சிறப்புக் குறிப்பு:-</u>** வட இமயத்தின் முடி முதல், தென்கோடிக் கன்னியாகுமரிப் பகலவதித் தாயின் திருவடி தொழும் கடற்கரை வரை இந்துமதம் வாழுகிறது என்பதை நினைவில் கொண்டு செயல்படுங்கள். அதாவது, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அருட்போர் வியூகம் அமைக்கப்பட்டாக வேண்டும். புரிந்தும், புரியவைத்தும் செயல்படுங்கள்.

7. சேலப்ப நாயக்கன் ஏரி அருள்மிகு மகாமுனியாண்டவர் ஆலயத் திருவிழாவில் நீங்கள் ஆற்றியுள்ள மிகப்பெரிய செயலாக்கங்கள் போற்றப்படுகின்றன, வாழ்த்தப்படுகின்றன. எனவே, இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடம் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் தஞ்சை எழுந்தருளும் போது இந்த ஆலயத்துக்கு கட்டாயம் வருகை புரிவார் என்று கூறுங்கள். இது பற்றி இப்பொழுதிருந்தே மக்களிடம் தெரிவித்து இந்து வேத நாயகத்தை, இந்துமதத் தந்தையை வரவேற்க ஏற்பாடு செய்யுங்கள். அருளுரையாற்ற, அருட்கணிப்புக் கூற, அருளாசி வழங்கிட, அருள்வாக்கு நல்கிட உரிய ஏற்பாடுகளை விரைந்து செய்திடவும்.

8. தாங்கள் அவ்வூரில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளதற்கும், விரகாலூரில் வார வழிபாட்டு மன்றம் துவக்கியதற்கும், கும்பகோணம் தாராசுரத்திற்கு சென்று திரு சுடாலினை (ஸ்டாலினை) ஊக்குவித்து வருவதற்கும், தஞ்சை அம்மாப்பேட்டை சென்று வாரவழிபாட்டு மன்றம் துவக்கியதற்கும், முக்காலக் கணிச்சி இராசேசுவரியை கிழக்கு மண்டல அ.வி.தி. பணிக்கு பயன்படுத்தி வருவதற்கும், பாபநாசம் பெரியவாள் நாகேசு அவர்களையும், அமைப்பாளர் மகாலிங்கம் அவர்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி வருவதற்கும், ... பெரிய அளவில் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். தொடர்ந்து செயல்படுங்கள்.

9. தாங்கள் '<u>அருட்படை வியூக நாயகம்</u>' அல்ல. ஆனால், தாங்கள் '<u>அருட்போர் வியூக நாயகம்</u>' என்பதை பொருள் ஆழம் தெரிந்து புரிந்து உணர்ந்து பிறருக்கு உணர்த்திச் செயல்படுக.

**<u>குறிப்பு</u>:-** அதாவது, உங்களுடைய நோக்கு, போக்கு, ஊக்கு, ஆக்கச் செயல்கள் மிகவும் பொறுப்பும், சுறுசுறுப்பும், நேர்மையும், கூர்மையும், நுட்பமும், திட்பமும், ஒட்பமும் உடையவைகளாக இருக்க வேண்டும். எச்சரிக்கை.

10. காரைக்குடி செயலாளர் பூபதி இல்லத்தில் தாங்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் "'<u>சன்னிதானப் பட்டம்' பெற்ற எந்த குடும்பத்தவர்களுக்கும், நமது சன்னிதானங்கள் மந்திரிக்கக் கூடாது, குவலய குருபீடமான அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்தான் மந்திரிக்க வேண்டும்</u>," என்ற அருளுலகச் சட்டத்தை சிறப்பாகக் கடைப்பிடித்திருக்கிறீர்கள். இதன்மூலம், இப்பொழுது, நாடு முழுவதும் மின்னல் வேகத்தில் புயலின் போக்கில் செயலாக்கச் சுற்றுப்பயணம் செய்து வரும் நமது இ.ம.இ., இ.மு.க. இணைப் பொதுச் செயலாளர்; **ஆத்தாள் தேவி அண்டபேரண்டத்திலிருந்து வந்து அருளாட்சிக் கோலநாயகியாக பத்துத் திருக்கைகளுடன் எழுந்தருளும், ஆத்தாள் தேவி குருமாரியம்மன் சன்னிதானம்** சித்தரடியார் இரா. சீனிவாசன் (M.Com.) அவர்கள் தாங்கள் மிகுந்த எழுச்சியோடும், விழிச்சியோடும், அயர்ச்சி இன்றி முயற்சிகள் பல தொடர்ச்சியாகச் செய்து வருவதாகக் கூறியதை மெய்ப்பித்துள்ளாய். இதற்காகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். எனவே, அடிக்கடி நமது இணைப் பொதுச் செயலாளரோடு தொடர்பு கொள்க.

11. தாங்கள் '<u>அருட்போர் வியூக நாயகம்</u>' என்பதால் அவசர அவசியமாக '<u>கருத்துப் புரட்சி</u>யை' உடனடியாக நாடு தழுவிச் செய்தாக வேண்டும்.

**<u>திட்டம்:-</u>**

**i.** நமது ஆதரவாளர், விருப்பாளர், நம்பிக்கையாளர், நம்மிடம் பாதிப்பு பரிகாரத்திற்காக வந்துள்ளவர், ... முதல் நமது உறுப்பினர்கள், சன்னிதானங்கள் வரை மிகப்பெரிய முயற்சிகளைச் செய்து; முடி அலங்கரிப்பவர் கடை, சலவைத் தொழிலாளர் கடை, சிறிய பெரிய தேநீர் கடைகள், உண்டிச் சாலைகள், சாலையோரத்துக் கடைகள், சிறிய பெரிய வெற்றிலைப் பாக்குக் கடைகள், சாலை நீர்க்கடைகள், மளிகைக் கடைகள், சிறு தொழிற் சாலைகள், காய்கறிக் கடைகள், ... முதலிய கடைகளில் '<u>கருத்துப் புரட்சி அறிவிப்புப் பலகை</u>' அல்லது '<u>கருத்துப் புரட்சி முகவரிப் பலகைகள்</u>' வரைந்து தயாரித்து நாடு முழுவதும் தொங்க விடப்பட்டாக வேண்டும்.

**குறிப்பு:-** இதன்மூலம்தான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய துரோகிகளையும், விரோதிகளையும் இனம் கண்டு கொள்ள முடியும். அவர்களும் சிந்திக்கத் தயாராவார்கள்; நாமும் சந்திக்கத் தயாராக முடியும்.

**ii.** <u>கடை முதலாளி</u>:- தன்னுடைய பெயருக்கு முன்னால்

**காமகோடிப் பீடம், பெரியவாள், பரமாச்சாரியார், சித்தாடியார் .....**

இவருக்குக் கீழ் வேலை செய்பவர்கள் குறைந்தது மூன்று பேர் இருக்க வேண்டும் அல்லது இவருக்குத் தெரிந்தவர்கள் மூன்று பேரின் பெயர் இருக்க வேண்டும்.

**iii.** <u>பணிபுரிபவர்:-</u>

- **ஏமகோடிப் பீடம், அரியவாள், கடவுளாச்சாரியார், சித்தாடியார் .....**
- **சோமகோடிப் பீடம், சீரியவாள், தெய்வீகாச்சாரியார், சித்தாடியார் ......**
- **வாமகோடிப் பீடம், வீரியவாள், தேவாச்சாரியார், சித்தாடியார் ......**

என்று பெயர்ப் பலகை எழுதி தெருக்கள் தோறும் தொங்க விடப்பட்டாக வேண்டும்.

**iv.** இந்த அறிவிப்புப் பலகை தொடர்பாக யார் வந்து எப்படி விசாரித்தாலும் சரி, 'இந்த அருட்பட்டங்கள் பதினெண்சித்தர் மடத்திலிருந்து தரப்பட்டவை'; இப்பட்டத்தை வழங்கியவர்,

***குருமகாசன்னிதானம் ஞாலகுரு***
***அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,***
***இந்து வேத நாயகம், இந்துமதத் தந்தை,***
***இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடம்,***
***காரனோடை, சென்னை - 67.***

(இந்துவேத பாடசாலை அலுவலகம், 13, குமாரசாமி முதலித் தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 600053.)

என்று மிகத் தெளிவாக நமது முகவரி தரட்டும். எதற்கும் கவலை வேண்டாம்.

12. தாங்கள் இந்த அஞ்சலையும் காட்டி உடனடியாக காரைக்குடி, நிர்வாகக் குழு செயலாளர் பா. பூபதி அவர்களின் காலியிடத்தில் (அண்மையில் தாங்களும் நமது இணைப் பொதுச் செயலாளரும் கலந்து கொண்டு பரிகாரப் பூசை செய்த இடம்) ஏதேனும் ஒரு வடிவ யாகசாலை வைத்து, வாரத்தில் ஏதேனும் ஒரு நாளில் (மற்றவர்கள் யாகம் செய்யாத நாளில்) **'சித்தர் கருவூரூர் அருட்கோட்ட'**த்தைத் துவக்கிடுங்கள். இதேபோல், அருட்போர் வியூகம் அமைப்பதற்காக, நம்மவர்கள் அவரவர் வசதி வாய்ப்பிற்கேற்ப குறைந்தது ஒரு முழ நீளமுள்ள திரிசூலங்கள் பல செய்து கோயில்கள், பொது இடங்கள், சாலைகள்; ஏரி, ஆறு, கிணறு முதலிய நீர்நிலைகள் என்று பல இடங்களிலும்; அருளாட்சி நாயகத்தின் அருட்போர் அறிவிப்பைக் கூறி நட்டு வைத்து; திருநீறு, குங்குமம் பூசலாம். முடிந்தால் பூசையும் செய்யலாம். மற்றவை நேரில்.

**அன்பு**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**

**சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**

<u>எழுதியவர்</u>: இணைப் பொதுச் செயலாளர் இரா. சீனிவாசன்.

24-7-1992,

சென்னை - 53.

1. அன்பு மகன் சீ.மணிக்கு பல்வேறு காரண காரியங்களாலும், உனக்கு அருட்போர் வியூக நாயகம் என்ற அருட்பட்டம் கொடுக்கப் பட்டிருப்பதாலும், சங்கராச்சாரியார்களால் நம்மவர்களுக்கு அருளுலகப் பொருளுலகப் பாதிப்புகள் வந்து விட்டதாலும், வெளிநாட்டு உள்நாட்டு மந்திரவாதிகளும் கூலி பெற்றுக் கொண்டு நம்மைக் கடுமையாகத் தாக்குவதாலும்; குருதேவரின் 54வது வயதில் 24.7.92 வெள்ளிக்கிழமை முதன்முறையாக மந்திரவாதிகளால் ஏவப்படும் தேவதைகள், சென்கள், வேதாளங்கள், பூதங்கள், பேய் பிசாசுகள் முதலிய அனைத்தையும் சென்னையிலிருந்து காஞ்சி செல்லும் வழியில் 48 மைல் பரப்பளவுக்குள் உள்ள அனைவரையுமே பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணிக்குள் நான்கு திரிசூலங்கள் நட்டு முழுமையாகத் தடைக் கட்டும் பணி நிகழ ஆரம்பித்து விட்டது. இதுதான் போர்க்கால போர்க்கோல ஆயத்தப் பணிகளின் முதல் கட்ட செயல்நிலை.

2. இது தொடர்பாகத்தான் நம்மவர்களுக்கு முழுமையான போர்க்கவசமாக, அனைத்து வகையான தாக்குதல்களையும் வாங்கித் தாங்கி, அடக்கி, வெல்லுவதற்காக பொன்னிறமான குழல் உருட்டை பின்னல் கயிறு கழுத்திலும், இரு கைகளிலும் அணிந்து கொள்வதற்காக முக்கியமானவர்களுக்கு அனுப்பப்படுகின்றது. உனக்கும் இத்துடன் அனுப்பப்படுகிறது. இவற்றை உடனடியாக அணிந்து கொள். மேலும் பெரிய இரண்டு கருப்பு பின்னல் கயிறுகள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றையும் பொன்னிறக் கயிறுகளோடு சேர்த்து வல, இட கைகளில் கட்டிக் கொள்ளவும்.

3. இனிமேல் எது நடந்தாலும் அருளாட்சி நாயகம் தஞ்சைத் தாத்தாவின் அருட்பட்டங்களைக் கூறியும், தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் முதல் 8 முனீசுவரர்களின் அருட்பட்டங்களைக் கூறியும்; ஆத்தாள் தேவி உக அற நாயகி, ஆத்தாள் தேவதேவி, ஆத்தாள் தேவி குருமாரியம்மன், கருகுலத்தில் 18 பீடங்களிலுள்ள அண்டபேரண்டத்தவர்கள் 18 பேர் முதலியவர்களை நினைத்துத் தடைக் கட்டு கட்டி விடுங்கள். அருட்போரின் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டன. எனவே, யாராக இருந்தாலும் கட்டுக்குள் உட்படுக என்று ஆணை இடுக.

வெற்றி நமதே, நாளை நமதே.

**அன்பு**
**ஞானுச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மட அலுவலகம்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: தட்டச்சு செய்த Cyclostyle நகலாகக் கிடைத்தது.//**

# போற்றற்குரிய ஆற்றல்மிகு ‘அருட்பணி விரிவாக்கத் திட்டம்’

ஓம் குருவே துணை

அம்பத்தூர்,
10-8-1992.

அனுப்புதல்:
இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரிய குருபீடம்,
குருதேவர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார்,
பதினெண்சித்தர் மடம்.

பெறுதல்:
வ.த. இராமசுப்பிரமணியன்,
64, காந்திநகர், காஞ்சிபுரம் - 631501.

(1) பத்தியுணர்வில் தமிழுணர்வைக் கலந்து பசனைத் திருக்கூட்டம் அமைத்துச் செயல்படும் பெரும் தவத்தீர்! வ.த. இராமசுப்பிரமணியன், தங்களுடைய 7-8-92ஆம் நாளிட்ட அஞ்சலும், அழைப்பிதழும், சிறு புத்தகமும் கிடைத்தன. இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, பரப்பிறம்மம், நான்குயுக நாயகம், அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் திருமுன்னர் மேற்படி அனைத்தும் படித்துக் காட்டப்பட்டன.

(2) தங்களுடைய அஞ்சலையும், அழைப்பிதழையும் கேள்விப்பட்டு குருபீடம் மிகவும் மகிழ்ந்தது. நமது தமிழகத்திற்குள் மட்டுமாவது நமது தமிழுணர்ச்சி இயக்கம் உடனடியாக ‘பத்தி இயக்கம்’, ‘பத்தி மறுமலர்ச்சி இயக்கம்’, ‘பத்தி அறிவு இயக்கம்’, ‘பத்தி அருள்

இயக்கம்', 'பத்தி விழிப்புணர்ச்சி இயக்கம்', 'பத்திப் பகுத்தறிவு இயக்கம்', 'பத்திச் சீர்திருத்த இயக்கம்', 'பத்திச் சமுதாய சீர்திருத்த இயக்கம்', 'பத்தி அரசியல் இயக்கம்', ... என்று பல நிறுவன நிருவாகங்களே நமது குருதேவர் தமது தெய்வீகத் தலைமையின் கீழ் நாடு முழுவதும் தோற்றுவித்து வருவது போல்; தாங்களும் செயல்பட்டிட்டால் இந்து மறுமலர்ச்சி ஏற்படும். அதாவது, தமிழகத்திற்குள் மத மறுமலர்ச்சி ஏற்பட்டேயாக வேண்டும்.

(3) குசராத் இந்துமதமும், கல்கத்தா இந்துமதமும், அரியாணு இந்துமதமும், அருணுசலப்பிரதேச இந்துமதமும், அசாம் இந்துமதமும், கேரளா இந்துமதமும், ஆந்திரா இந்துமதமும், பம்பாய் இந்துமதமும், பைந்தமிழகத்து இந்துமதமும் ... வெவ்வேருனவை அல்ல, வெவ்வேருனவை அல்ல, வெவ்வேருனவை அல்ல. ஆனுல், நாட்டு நடப்பில் மொழியின் காரணமாகவும், மொழிவழி இனப்பற்றின் நாகரிகங்களின் காரணமாகவும்; ஏறத்தாழ இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையான இந்துமதம் இருக்கின்றது. இதற்கேற்ப மாநில வாரியாக இந்துமதக் கடவுள்கள் மாறுபடுகின்றனர், வழிபாடுகள் மாறுபடுகின்றன, பூசைமொழி வாசகங்கள் மாறுபடுகின்றன, மந்திரங்கள் வேறுபடுகின்றன, படையல் பொருள்கள் வேறுபடுகின்றன .....

இவற்றுல் வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்களேக் கடந்து வந்துள்ள அன்னிய மதங்கள் மிக எளிதாக இமயத்தின் முடி முதல் குமரி முனேயின் அடி வரை பரவியுள்ள இந்துமதத்தைச் சிதைத்து, சீரழித்து, சின்னுபின்னப் படுத்தி, கடித்து மென்று, தின்று, விழுங்கி, ஏப்பம் விட்டு விட்டன...!!!??? இதை மாற்ற வேண்டும், மாற்ற வேண்டும், மாற்ற வேண்டும்.

அதற்காக, **ஏற்றதொரு போற்றற்குரிய ஆற்றல்மிகு 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்'** என்ற ஒரு செயல்திட்டத்தை குவலய குருபீடம், அனுதியாதி கடந்த தம்பிரான் சுவாமிகள், அனுதிசங்கராச்சாரியார்

ஆதீனம், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் இப்போது அறிவித்துள்ளார்கள், அறிவித்துள்ளார்கள், அறிவித்துள்ளார்கள். இதனைத் தங்களைப் போன்றோர் நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஏற்றுச் செயலாக்கிட முன்வர வேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் குறைப்பட்டுக் கொண்டது போல் நாட்டு மக்களிடையில் உள்ள மதம் பற்றிய ஆர்வமின்மை, அக்கரையின்மை, பற்றின்மை, ஆழ்ந்த ஈடுபாடின்மை, ... முதலியவையெல்லாம் வேருடன் அகற்றப்பட்டிடும். உரிய மாற்றங்கள் விளைவிக்கப்பட்டிடும்.

(4) நமது குருபீடம் அறிவித்துள்ள 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' என்பது **இந்துவேத அருட்பணி விரிவாக்கத் திட்டம்** என்றும், **இந்துமத அருட்பணி விரிவாக்கத் திட்டம்** என்றும் இரு பெரும் பிரிவுகளைப் பெற்றிருக்கிறது. இதன்படி இந்துவேதக் கருத்துக்களை, இந்துவேத வரலாறுகளை, இந்துவேத வழி தயாரான அருளாளர்களை, இந்துவேத வழி செயல்பட்டிட்ட அரசர்களை, செயல்வீரர்களை, இந்துவேதப் பூசைமுறைகளை, நெறிகளை, விதிகளை, மறைகளை, இந்து வேத வாழ்வியல்களை, இந்து வேதச் செயலாக்கங்களை, இந்துவேதத்திற்குரிய 48 வகைப்பட்ட கோயில்களை, இந்துவேதத்திற்குரிய 48 வகைப்பட்ட கடவுள்களை ... மக்களுக்கு ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் (Both Theoretical and Practical knowledge) வழங்குகின்ற பணியைச் செய்கின்றது **இந்துவேத அருட்பணி விரிவாக்கத் திட்டம்**.

(5) **இந்துமத அருட்பணி விரிவாக்கத் திட்டம்**:- பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள இந்துவேத நூல்களான 396 நூல்களை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்துவேத அருட்பணி விரிவாக்கத் திட்டம். இந்துமத நூல்களான 36 நூல்களை (பதினெண்சித்தர்கள் வழங்கியது) அடிப்படையாகக் கொண்டதுதான் இந்துமத அருட்பணி விரிவாக்கத்

திட்டம். இதன்படி தனிமனிதர்களின் இடங்களிலும், பொது இடங்களிலும், கோயில்களின் வளாகங்களிலும், மெய்ஞ்ஞானக்கொடி எனும் 'சீவலிங்கக் கொடி' -

(*குறிப்பு*:- இது சிவலிங்கக் கொடி அல்ல; இது **சீவலிங்க**க் கொடி. அதாவது ஆவி + ஆன்மா + ஆருயிர் = சீவன். இந்தச் சீவனின் இயக்கமாக அல்லது விளக்கமாக உருவானதுதான் இந்தச் சீவலிங்கக் கொடி. இந்தக் கொடிதான் பதினெண்சித்தர்களால் அண்டபேரண்டங்கள் அனைத்திலும் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் தலைமை தாங்கி வழிநடத்தும் மெய்ஞ்ஞானக் கொடியாக விளங்கிடும். இதைப் புரிந்து கொள்ளுங்கள். சிவம், வைணவம் என்ற வேறுபாடு இதில் பார்க்கத் தேவையில்லை. எனவே, பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்தை விளக்குகின்ற, குறிக்கின்ற கொடி இந்த மெய்ஞ்ஞானக்கொடிதான்.)

- நெடிய உயரிய பெரிய கம்பியில் ஏற்றி அதனருகில் திரிசூலம் நட்டு அதன் அருகில் யாக குண்டம் அமைத்து 'அருட்கோட்டம்' உருவாக்கி வாரத்தில் ஒரு நாளாவது ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி எனும் ஐந்தில் ஏதாவது ஒன்றையாவது வளர்த்து; மக்களுக்கு மந்திரித்து, மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாகவும், மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி; மக்களின் எல்லாவகையான நலிவு, மெலிவு, குறை, ஏக்கம், தேக்கம், வீக்கம், முடக்கம், அடக்கம், ஒடுக்கம், நடுக்கம், அச்சம், கூச்சம், மாச்சரியம், நாள்கோள் மீன் பாதிப்பு, மந்திரவாதிகள் பாதிப்பு, நாகதோசம், செவ்வாய் தோசம், மூல தோசம், காற்று, கருப்பு, பேய், பிசாசு, கண்ணேறு .... முதலிய பலவகைப்பட்ட பாதிப்புக்களிலிருந்து ஏழை, எளிய, பாட்டாளி, பாமர மக்களை எல்லாம் காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும், காப்பாற்றியேயாக வேண்டும். இதுதான் சித்தர் கருவூரர் அருட்கோட்டத்தின் செயல்திட்டம், சித்தர் கருவூரர் அருட்கோட்டத்தின் செயல்திட்டம், சித்தர் கருவூரர் அருட்கோட்டத்தின்

செயல்திட்டம். இதன்படிச் செயல்பட யார் முன்வந்தாலும் சரி, அவர்களுக்கு மந்திரிக்கக் கற்றுத் தர பதினெண்சித்தர் மடம் தயாராக இருக்கிறது. எனவே, பதினெண்சித்தர் மடம்

"வாருங்கள் மானுடரே! உங்களைக் கடவுளாக்குகிறோம்",

"வாருங்கள் மானுடரே! பூசை, தவம், குண்டலினி, ஓகம், யோகம், ... முதலிய அனைத்தையும் கற்றுத் தருகிறோம்",

"வாருங்கள் மானுடரே! தனிமனித பூசைக்கும், குடும்பப் பூசைக்கும், தொழில் நிலையங்களுக்கும், கோயில்களுக்கும் தேவையான சக்கரங்கள், தகடுகள் வழங்குகிறோம்",

"வாருங்கள் மானுடரே! உங்களை மடாதிபதி, பீடாதிபதி .... வாமகோடிப்பீடம் ஆகிய 18 அருட்பட்டங்களுக்கும் உரியவராக்குகிறோம் ....

என்று பல்வேறு செயல்திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது, வழங்கிக் கொண்டிருக்கிறது, வழங்கிக் கொண்டிருக்கிறது.

(6) பேரார்வமுடைய பெரியீர்! நம் நாட்டில் பல மடங்கள் இருக்கின்றன. அதன் மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், ... முதலியவர்களில் யாருமே ஏறத்தாழ எல்லாப் பொதுமக்களையும் சந்திப்பதில்லை. ஏழை, எளிய, பாட்டாளி மக்களின் பக்கம் திரும்புவதே இல்லை. எனவேதான், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி இந்துமத மறுமலர்ச்சிக்காக, இந்துமத ஆட்சிமீட்சிக்காக, இந்துவேத வளவளர்ச்சிக்காக மேற்படி **அருட்பணி விரிவாக்கத் திட்டம்** என்ற செயல்திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். இதை உலகியலாகச் செயலாக்குவதற்காக "தனிமனித வாழ்விற்கும், குடும்ப வாழ்விற்கும் உரிய அருட்பணி விரிவாக்கத் திட்டங்களைச் செயலாக்குவதற்காக 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' செயல்படட்டும்" என்றும்; "சமுதாய வாழ்வுக்கும், அரசியல் வாழ்வுக்கும் உரிய அருட்பணி விரிவாக்கத் திட்டங்களைச் செயலாக்குவதற்காக

'இந்து முன்னேற்றக் கழகம்' என்ற அமைப்புச் செயல்படட்டும்" என்றும் அருளுலக அறிவிப்பு வழங்கி இருக்கிருர். இவை பற்றி சிந்தியுங்கள், பதினெண்சித்தர் மடத்தைச் சந்தியுங்கள்! இவை பற்றி சிந்தியுங்கள், பதினெண்சித்தர் மடத்தைச் சந்தியுங்கள்! இவை பற்றி சிந்தியுங்கள், பதினெண்சித்தர் மடத்தைச் சந்தியுங்கள்!

(7) பேரன்புடையீர்! அன்பு கூர்ந்து பத்தியுணர்வின் பெயரால் நீங்கள் இந்த அஞ்சலை உங்களுக்குத் தெரிந்த பத்தியுணர்வுள்ள அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள். உங்களுடைய காஞ்சிபுரம் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினர் அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள். நீங்களும் உங்களுடைய மதிப்புக்கும், நட்புக்கும், இந்துமத ஈடுபாட்டுக்கும் உரியவர்கள் அனைவரும் இந்த அஞ்சலை பலமுறை திருப்பித் திருப்பி படியுங்கள். அல்லது படிக்கச் சொல்லிக் கேளுங்கள். அப்பொழுதுதான் நமது பத்திப்பாடல் பாராயணங்கள், பசனைக் கூட்டங்கள், வார வழிபாட்டு மன்றங்கள், முத்தமிழ்ச் சங்க விழாக்கள், புராண இதிகாசக் கதை விரிவுரைகள், இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் .... முதலியவற்றில் எதனுலும் நமது மதத்துக்கோ, பத்தி உணர்வுக்கோ, மத வாழ்வுக்கோ விழிச்சியையோ, எழுச்சியையோ, செழுச்சியையோ, மாட்சியையோ உருவாக்கித் தர முடியாது, உருவாக்கித் தர முடியாது, உருவாக்கித் தர முடியாது என்பதைப் புரிந்து கொள்வீர். அதன்பிறகாவது, பதினெண்சித்தர் மடத்தின் திருவாயிலுக்கு வாருங்கள், திருவாயிலுக்கு வாருங்கள், திருவாயிலுக்கு வாருங்கள். பதினெண்சித்தர் மடத்தின் திருவாயில் எப்போதும் அலுவலகத் தொடர்புக்காக திறந்தே இருக்கும்.

(8) நமது குவலய குருபீடம், அண்டபேரண்ட அருட்பேரரசர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர் அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிருர். அருளுலகப் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும், இடர்ப்பாடுகளையும், அழிவு

இழிவுகளையும், தாழ்ச்சி வீழ்ச்சிகளையும் அகற்றிடும் மாபெரும் முயற்சியே பதினெண்சித்தர் மடத்துக் குருபீடத்தின் முயற்சி. இதைப் புரிந்தும், புரியவைத்தும் செயல்பட வாருங்கள். இந்தக் கருத்தோட்டத்தில் உங்களுடைய தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவு ஆற்ற பதினெண்சித்தர் மடத்துச் சன்னிதானங்கள், தம்பிரான்கள், ஆச்சாரியார்கள் ... முதலியோர் தயாராக இருக்கிறார்கள், தயாராக இருக்கிறார்கள், தயாராக இருக்கிறார்கள். நீங்கள் தயாரா? நீங்கள் தயாரா? நீங்கள் தயாரா? உங்களுடைய தமிழ்ச் சங்கம் தயாரா? உங்களுடைய தமிழ்ச் சங்கம் தயாரா? உங்களுடைய தமிழ்ச் சங்கம் தயாரா? உடனடியாக விரிவான பதில் தேவை. குருபீடத்தையும் சந்தித்து தங்களது விளக்கத்தைத் தெரிவிக்கலாம். அல்லது தொலைபேசியில் *(654447)* வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். தங்களுக்கு அருகிலேயே ஓரிக்கையில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழக கண்காணிப்பாளராகப் பணியாற்றும் சித்தர் தேரையர் S. லோகநாதன் அவர்களையும் சந்திக்கலாம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**அன்பு**

**அந்தணர் அண்ணல்,**

**ஞானாச்சாரியார்,**

**பதினெண்சித்தர் மடம்,**

**சென்னை - 53.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதி நகலாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்பது குறிக்கப்படவில்லை.//**

# நமது வாரிசுகளே அருட்பயிரின் நாற்றுப் பண்ணைகள்...

ஓம்

பொன்னேரி,
28-8-1992.

அருள்மிகு இந்து வேதம் பரப்பும் நாயகம், சமயக்குரவர் நால்வர் திருத்தோன்றல் சித்தரடியார் த. கேசவன் B.Com., அவர்கள் சமூகத்திற்கு அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் பொன்னேரியிலிருந்து விடுத்துக் கொள்ளும் பதில் மடல்.

1. அன்பு மகனே! உன் அஞ்சல் கண்டேன். மிக்க மகிழ்ச்சி. நீ அனுப்பியுள்ள யாகச் சாம்பல் உன்னுடைய மனம் போல் மிகச் சிறந்த வெற்றியைப் பெற்றிருக்கிறது.

2. உனக்கும், உன் குடும்பத்தாருக்கும், உன் சகலையின் குடும்பத்தாருக்கும் தொடர்ந்து அருளுலகப் பொருளுலக பாதுகாப்புகள் வழங்கப்படுகின்றன. கவலை வேண்டாம்.

3. உங்கள் சகலையின் மகன் பற்றி உன்னுடைய சகலையும், அவர் துணைவியாரும் நேரடியாக குருபீடத்துடன் தொடர்பு கொண்டு தங்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு கேட்டுக் கொள்வது நல்லது. அதில் எல்லோருடைய கையொப்பமும் எழுதியனுப்பச் சொல்லுங்கள். அதே அஞ்சலில் இந்து வேதம் பரப்பும் நாயகமாகிய தாங்கள் பரிந்துரை செய்து கையொப்பமிட்டு அனுப்பினுல் நல்லது. தங்கள் சகலையின் மகன் ஓரளவு நலமடைந்து விட்டான் என்ற நிலையில் எட்டு நாட்களுக்கு ஒரு முறை (வாராவாரம்) அணிந்து கொள்ளக்

கூடிய தாயத்து நான்கு நான்காக (மாதாமாதம்) குருபீடத்திலிருந்து வாங்கி சில மாதங்கள் அணிந்து கொண்டால் நல்லது.

**குறிப்பு:** அவர்களுக்கு விருப்பமிருந்தால், நம்பிக்கையிருந்தால், பூசைச் செலவுகளைச் செய்யத் தயாராக இருந்தால் இதன்படி செய்து கொள்ளட்டும். அடுத்து அவர்கள் குடும்பத்தார்கள் அனைவருமே வாராவாரம் ஒரு தாயத்து அணிந்து கழற்றி, ஒரு புது மண்கலயத்தில் சேர்த்து வைத்து; சில மாதங்கள் கழித்து குடும்பத்தோடு கன்னியாகுமரிக்கோ, இராமேசுவரத்திற்கோ சென்று தாங்களும், நமது சன்னிதானங்களும் (குறைந்தது எட்டு பேர்கள்) சென்று கடற்கரையில் யாகம் வளர்த்து; மாலையில் முறைப்படி பரிகாரப் பூசை செய்து குருதிப் பலி கொடுத்து, அந்த வீட்டார் அனைவருக்கும் குருதிப் பொட்டு வைத்து, கலசத்தை ஒரு கல்லோடு கட்டி கடலுக்குள் விட்டு விட்டு, எல்லோரும் தலைமுழுகி விட்டு (பாதிக்கப் பட்ட குடும்பத்தார்களும், நமது சன்னிதானங்களும்) பரிகாரப் பூசையை நிறைவு செய்ய வேண்டும். பலி பொருளை சமைத்துக் கொண்டு வந்து மீண்டும் யாகம் வளர்த்து, சிறிதளவு யாகத்தில் போட்டு பூசையை நிறைவு செய்ய வேண்டும். இந்த நெடிய பரிகாரப் பூசையை அவர்கள் செய்து கொள்ளத் தயாரா? என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். வாராவாரம் தாயத்து மாற்றும் திட்டம் எத்தனை மாதங்கள் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. ஆண்டுக் கணக்கிலும் நீடிக்கலாம்.

4. தாங்கள் தங்கள் விருப்பம் போல் திருச்செந்தூர் சென்று முடிகாணிக்கை செலுத்தி விடுங்கள்.

**குறிப்பு**:- உலகியலாகச் சிக்கல் இருந்தால் தாடி வளர்ப்பதைத் தள்ளிப் போடுங்கள். எல்லாமே தங்கள் விருப்பப்படிதான். எனவே, எதற்கும் கவலைப்பட வேண்டாம்.

5. தாங்கள் ஏற்கனவே இந்து நாடார் பத்தர் சபை சொற்பொழிவு ஏற்பாடுகளில் தங்களுக்கு ஏராளமான பொருட்செலவு ஆகியிருக்கிறது. திருவள்ளுவர் கழக சொற்பொழிவிலும் பொருட்செலவு ஆகியிருக்கிறது. எனவே, தாங்கள் இ.மு.க. பொருளாளர் என்ற முறையில் வங்கியில் நம்மவர்கள் சிலரோடு சேர்ந்து கூட்டாக கணக்கு ஒன்றைத் துவக்கிக் கொள்ளுங்கள். புத்தகங்கள் விற்பது, முடிகயிறு, உருத்திராக்கம், ... காணிக்கை வருவது, அருட்கணிப்பிற்குக் காணிக்கை பெறுவது முதலியவற்றில் 5இல் 1 பங்கு இ.மு.க. நிதியாக சேர்த்து எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இது அல்லாமல் நம்முடைய இயக்கத்தவர்களிடம் மாதா மாதம் குறிப்பிட்ட தொகை இ.மு.க. நிதியாகப் பெற்று வங்கியில் சேர்த்து விடுவது நல்லது. இவற்றோடு குருதேவரை தென்மண்டலத்திற்கு வரவழைப்பதற்காக நமது உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நம்மிடம் பரிகாரங்கள் செய்து கொள்பவர்கள் முதலியவரிடம் இப்பொழுதிருந்தே நன்கொடைகள் வாங்கி அவற்றையும் வங்கியில் சேர்த்து வையுங்கள். அப்பொழுதுதான் எம்மை மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது தென்மண்டலத்திற்கு அழைக்க முடியும். ஏனெனில், யாம் தென்மண்டலம் வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் நம்மவர்களால் எம்மை தென்மண்டலத்திற்கு அழைக்க முடியவில்லை.

**குறிப்பு:-** அன்பு மகனே! யாம் தென்மண்டலத்தில் உள்ள அனைவரையும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கட்டாயம் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் யாரையும் இட்டும் தொட்டும் சுட்டியும் வாழ்த்தி அருள்வழங்கி அருளாளராக்க முடியும். அதுமட்டுமல்ல, தங்களுடைய குழந்தைகளைப் பார்த்து இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. தங்களையே பல மாதங்களுக்கு ஒருமுறைதான் பார்க்க முடிகிறது. நம்மவர்களில் பலர் சென்னை வந்து எம்மைப் பார்த்து வாழ்த்துப் பெற்றுத் திரும்பக் கூடப் பொருளாதார வசதியில்லாதவர்களாக

இருக்கிறார்கள். அவர்களுக்கும் எம்மைப் பார்க்க வேண்டுமென்றுதான் ஆசையிருக்கும். மேலும் யாம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை தென்மண்டலம் வந்தால்தான் நமது வளர்ச்சி நன்றாக இருக்கும். ஆனால், எம்மை வரவழைப்பதில் தங்களுடைய பொருளாதார நிலை பாதிக்கப்பட்டு விடக் கூடாது, பாதிக்கப் பட்டுவிடக் கூடாது. பாதிக்கப்பட்டு விடக் கூடாது. எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை. இதேபோல் இந்து நாடார் பத்தர் சபையிலும், திருவள்ளுவர் கழகத்திலும் மாதா மாதம் கூட்டங்கள் நடத்துவதினாலும் தங்கள் பொருளாதாரம் பாதிக்கப் பட்டு விடக் கூடாது. எச்சரிக்கை.

6. மாதா மாதம் நடக்கும் அல்லது நடக்கப் போகும் கூட்டங்களை கூட்டு வழிபாட்டுக் கூட்டமாக, யாக பூசையாக (பத்த நாடார் சங்கத்தில்) நாடார் பத்த சபையில் ஏற்பாடு செய்திட்டால் பூசைக்காகவும், யாகத்திற்காகவும், அருட்சினைக்காகவும், அருளூறு பூசனைப் பொருளுக்காகவும், மந்தரித்துக் கொள்வதற்காகவும்; மதுரை மாநகரிலும், சுற்று வட்டாரங்களிலும், கூடுமான வரை தென்மண்டலம் முழுவதுமிருந்து நன்கொடை வசூலிக்கலாம். இதன்மூலம், இந்து நாடார் பத்தர் சபை கட்டிடத்தை ஒரு முழுநாள் வாடகைக்கோ, அரைநாள் வாடகைக்கோ பேசிக் கொள்ளலாம். மாதமொரு முறை, தென்மண்டலமும், கிழக்கு மண்டலமும் என்ற இரு மண்டலங்களிலுமுள்ள அனைத்து விதமான பாதிப்பாளர்களையும் வரவழைத்து 'பரிகார யாகம்', 'ஓட்டு மொத்த அருட்கணிப்பு' என்ற இரண்டையும் செய்து முடித்து விடலாம். இப்பூசைகளின் மூலம் தென்மண்டல நிர்வாகக் குழுவிற்கு கணிசமான அளவு நிதி கிடைக்கும். அதாவது, பரிகாரத்திற்கு வருகிற அனைவரிடமிருந்தும் கட்டட வாடகைக்காகவும், பூசைக்காகவும் ஒவ்வொரு மாதமும் பணம் வசூல் செய்துவிடலாம். மேலும், இரு மண்டலங்களிலிருந்தும் வரக்கூடிய சன்னிதானங்களை வைத்துக் கொண்டு ஏராளமானவர்களுக்கு

அருட்கணிப்பு கூறலாம். மக்களுக்குச் சோதிடத்திலும், குறிபார்ப்பதிலும், அருள்வாக்கு கேட்பதிலும், வரியியல் (கைரேகை) கணித்துக் கொள்வதிலும், பிறப்பியல் (சாதகம்) கணித்துக் கொள்வதிலும் மிகுந்த ஆர்வமும், நம்பிக்கையும், ஈடுபாடும் இருக்கின்றன. எனவே, இந்த அருட்கணிப்புகளின் மூலம் வசூலாகும் தொகையில் 5இல் ஒரு பங்கு தென்மண்டல நிர்வாகக் குழு இ.மு.க. நிதிக்காகவும் மற்ருெரு 5இல் ஒரு பங்கு மீனுட்சியம்மன் கோயில் ஆடிவீதியில் திருவள்ளுவர் கழகத்தில் கூட்டம் நடத்துவதற்காகவும் எடுத்துக் கொள்ளலாம்.

7. இப்படியாக மாதத்தில் ஒருநாள் இந்து நாடார் பத்த சபையில் நடக்கும் கூட்டு வழிபாட்டிலும், யாகபூசையிலும், பரிகார பூசையிலும், அருட்கணிப்பிலும் வசூலாகக் கூடிய தொகையில் 5இல் இரண்டு பங்கு இ.மு.க. நிதியாக எடுத்துக் கொண்டு, மீதி மூன்று பங்கை அருட்கணிப்பு பரிகாரக் காணிக்கையாக பதினெண்சித்தர் மடம் குருபீடத்திற்கு அனுப்பிஞல் போதும் என்ற சிறப்புச் சலுகையை வழங்குகிருேம் யாம். இதைப் புரிந்து செயல்படுங்கள். மேலும், மாலேயில் இ.ம.இ., இ.மு.க. கருத்துக்களே, இந்து மத வரலாறுகளே, இந்து வேத தேவ விளக்கச் செய்திகளே மாதந்தோறும் பொதுமக்களுக்கு வழங்கலாம். அதஞல், இ.மு.க. உறுப்பினர்கள், இ.ம.இ. உறுப்பினர்கள், சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்ற உறுப்பினர்கள் ஏராளமாகச் சேருவார்கள், ஏராளமாகச் சேருவார்கள், ஏராளமாகச் சேருவார்கள். அதுமட்டுமல்ல! நமக்குத் தாராளமாக ஆதரவாளர்கள் பெருகிடுவார்கள், ஆதரவாளர்கள் பெருகிடுவார்கள், ஆதரவாளர்கள் பெருகிடுவார்கள்.

இவற்றின் மூலம் நாம் மதுரை மாநகருக்குள்ளும், சுற்று வட்டாரங்களிலும், தென்மண்டலத்திலும், கிழக்கு மண்டலத்திலும் விரைந்து விரிந்த செல்வாக்குப் பெற்று வளர முடியும்.

8. அதாவது, மாதாமாதம் தென்மண்டலமும், கிழக்கு மண்டலமும் இணேந்து நடத்தும் இரு மண்டல மாநாடு என்ற நிலேயில் நாம்

செயல்பட முடியும். முடிந்தால் நமக்குக் கிடைக்கக் கூடியவர்களை வைத்துக் கொண்டு கிழக்கு மண்டலத்திலும் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இரு மண்டல மாநாடு, இரு மண்டல பரிகார யாக பூசை, இரு மண்டல அருட்கணிப்புத் திட்டம், இரு மண்டலக் கூட்டு வழிபாடு என்ற பெயர்களில் நமது சன்னிதானங்கள் ஒன்று கூடி பொதுமக்களோடு தொடர்பு கொண்டிட முடியும். இச்செயல் திட்டத்தைச் சிந்தித்துப் பாருங்கள். இத்திட்டத்தின் மூலம் தேவையான பொருளாதார வளமும், வளர்ச்சியும் கிடைக்கும். மேலும், மாதமொருமுறை திருவள்ளுவர் கழகத்திலும், நாடார் பத்த சபையிலும் நமது கூட்டங்கள் நடக்கும்.

**குறிப்பு:-** மேற்படி வளர்ச்சிகளாலும், வளங்களாலும் செல்வாக்குகளாலும் எம்மை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ, மாதம் ஒருமுறையோ அல்லது ஒரே மாதத்தில் இரண்டு மூன்று முறையோ தென்மண்டலம் சுற்றுப் பயணத்திற்கு அழைக்க முடியும்.

9. குறிப்பாக, தனிமனிதர்களின் திருமண விழா, புதுமனை புகுவிழா, தொழில் துவக்க விழா, நீத்தார் நினைவுநாள் விழா, கோயில் விழா, கல்வி நிலையங்களில் இலக்கிய விழா, இ.ம.இ. - இ.மு.க. கிளை அலுவலகத் துவக்க விழா, அருட்கோட்டத் துவக்க விழா முதலிய பல விழாக்களுக்கு யாம் நாடு முழுவதும், குறிப்பாக தென்மண்டலம் முழுவதும் யாம் சுற்றுப் பயணம் வரக் கூடிய மிகப் பெரிய வசதி வாய்ப்புகள் ஏற்படும். எனவே, தாங்கள் உடனடியாக மிகுந்த துணிச்சலோடு முடிவெடுத்து மாதத்தில் முதல் அல்லது இரண்டாவது அல்லது மூன்றாவது அல்லது நான்காவது ஞாயிற்றுக் கிழமை தவறாமல் இந்து வேத தேவ விளக்கம் அல்லது இ.ம.இ., இ.மு.க. கூட்டம் அல்லது கூட்டு வழிபாடு பரிகாரப் பூசையும் அருளுரையும் அருட்கணிப்பும் சிறந்த பொதுமக்கள் விழாவாக இந்துநாடார் பத்தர் கலை மன்றத்தில் நடைபெற ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள்,

ஏற்பாடு செய்யுங்கள். இதுதான் அருட்போர் ஆயத்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதின் செயல்திட்டம். இதுபோல், நான்கு மண்டலங்களிலும் மாதாமாதம் நமது சன்னிதானங்கள் ஒன்று கூடி பொதுமக்களை சந்தித்து அருளுரை வழங்கவும், அருட்கணிப்புகள் கூறவும், பரிகாரங்கள் செய்யவும் வசதியான ஒரு பொது நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டேயாக வேண்டும். இந்தச் செயல்திட்டத்திற்கு இந்து வேதம் பரப்பும் நாயகமாகிய தங்களையே நான்கு மண்டலங்களுக்கும் <u>மாத மாநாடு அமைப்புச் செயலாளர்</u> என்று அருளாணை பெற்ற குருவாணையால் தங்களுக்குப் பதவி வழங்குகிறோம். எனவே, தாங்கள் இச்செயல்திட்டத்தை அரும்பாடுபட்டு நேரில் சென்றும், நமது சன்னிதானங்களை அனுப்பியும் <u>நான்கு மண்டலங்களிலும்</u> செயலுக்குக் கொண்டு வாருங்கள். இதனையே தஞ்சைத் தாத்தா தங்களிடம் எதிர்பார்க்கிறார். இதற்குரிய பயனும், உரிமையும், பெருமையும் தங்களுக்கு இப்பிறவியில் மட்டுமின்றி எப்பிறவியிலும் கிடைக்கட்டும்.

10. அன்பு மகனே! நீ அனுப்பிய யாகச் சாம்பலின் பொருட்டு நிகழ்த்தப்பட்ட சிறப்புப் பூசையில் நேற்று 27/8/92 குருநாளன்று முற்பகல் காலை 10.10 மணிக்கு தங்களுடைய பழம்பிறப்புக்களில் இரண்டாவது யுகத்தில் இராமாயணக் காலத்தில் தங்களுடைய பழம்பிறப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய முழு விவரங்களை தென்மண்டல அ.வி.தி. தலைவர் துரைராசன் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**<u>முற்பிறப்பு அறிவிப்பு:-</u>**

இன்று இந்து வேதம் பரப்பும் நாயகமாகவும், சமயக்குரவர் நால்வர் திருத்தோன்றலாகவும் உள்ள சித்தரடியான் த. கேசவன் B.Com., அவர்கள் இரண்டாவது யுகத்தில் “மாயோன் திருத்தோன்றலாகிய” சித்தர் காகபுசுண்டர் பாரம்பரிய <u>இராமதேவனி</u>ன் தந்தை தசரத

மாமன்னனின் முதலமைச்சரான 'சுமைதரன்' = சுமைகளைத் தாங்கும் தரம் படைத்தவன் => சுமந்தரன் என்ற பெயர் பெற்றவன் ஆவார்.

11. அன்பு மகனே! உன்னையும் உன்னுடைய அருட்திருக் குடும்பத்தையும் பார்க்க பெரிதும் விரும்புகிறேன். என்னுடைய அடக்க முடியாத ஆசையால் எந்த நேரத்திலும், திடீரென்று உன்னைப் பார்க்க வந்து விடுவேனோ என்று கருதுகிறேன். அந்த அளவில் உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கட்டுக்கடங்காமல் இருக்கிறது.

12. அன்பு மகனே! உனக்கு வசதி வாய்ப்பு இல்லையென்றாலும் உன்னுடைய குழந்தைகளையாவது செகதீசனுடனோ துரையுடனோ பொன்னேரிக்கு அனுப்பி வை. அவர்கள் ஒன்றிரண்டு நாட்களாவது எம்மோடு தங்கியிருந்து விட்டு வரட்டும். வேண்டுமானால், கார்த்தியாயினி குழந்தைகளோடு சேர்த்து அனுப்பு. நம் வீட்டுக் குழந்தைகள்தான் வருங்காலத்தில் அருளுலகப் பயன்களை நல்கக் கூடிய கனி மலர்ச் சோலைகளாக விளங்கப் போகிறார்கள், விளங்கிடல் வேண்டும். எனவே, நம்மவர்களில் பெரியவர்கள் எம்மை அடிக்கடி சந்திக்கா விட்டாலும், நம்மவர்களுடைய குழந்தைகள் அடிக்கடி சந்தித்தேயாக வேண்டும்.

13. அப்படி நம்மவர்களின் குழந்தைகள் அடிக்கடி எம்மைச் சந்தித்து அருட்பயிரின நாற்றுப் பண்ணைகளாகவும், விதைப் பண்ணைகளாகவும் நாற்றங்காலாகவும் தயாரானால்தான் வருங்காலத்தில் அருளுலகம் செழுமையும், கொழுமையும் உடையதாக இருந்திடும்.

14. இல்லாவிட்டால், நாம் எத்தகைய பெரிய பெரிய வெற்றிகளைப் பெற்றிட்டாலும், நாம் எத்தகைய பெரிய பெரிய சாதனைகளைச் சாதித்தாலும் வருங்காலத்தில் அருளுலகம் வறுமையும், வெறுமையும் பெற்றிடும், பெற்றிடும், பெற்றிடும். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை. ஏனென்றால்,

எம்மால் பெரியவர்கள் மட்டும் அருளாளர்களாகத் தயாரிக்கப்பட்டுப் பயனில்லை. இளைஞர்களும், சிறுவர்களும், குழந்தைகளும் அருளாளர்களாக அருளுலக வாரிசுகளாக தயாரிக்கப் பட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான், இந்த நான்காவது யுக இறுதிவரை, அதாவது மீதமுள்ள 4,27,000 ஆண்டுகளிலும் அருளாளர்கள் வாழையடி வாழையெனத் தொடர்ந்து பரம்பரையாகத் தோன்றிட முடியும், தோன்றிட முடியும், தோன்றிட முடியும். இதற்குரிய அருளாணை முதல் யுகத்திலேயே ஆதிசிவனாரின் குருபாரம்பரியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, "இராசிவட்ட நிறைவுடையாராகத் தோன்றிடும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி விண்ணையும் மண்ணையும் இணைத்து வாழையடி வாழையென அருளுலக வாரிசுகள் தோன்றுவதற்குரிய வித்துக்களையும், சத்துள்ள பயிர்களையும், அழிவில்லாத சொத்துக்களையும் உருவாக்கிச் செல்வார்" என்பதே குருபாரம்பரிய வாசகம். இதனால்தான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய எமது தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் வரப் போகிற அல்லது நடக்கப் போகிற அருட்போரினால் விளையக் கூடிய அழிவுகள், இழப்புக்கள், சிதைவுகள், சீரழிவுகள், செயல்கள், பழிபாவங்கள், சாபங்கள் முதலியவைகள் எள்முனையளவு கூட என்னைப் பாதிக்கக் கூடாது என்பதற்காகவே தாமே முன்வந்து என்னிடமிருந்து அருளாட்சி நாயகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதனால், என்னுடைய உரிமையோ பெருமையோ குறைந்து விடக் கூடாது என்பதற்காக என்னைத் தன்னுடைய **அருளாணை வழங்கு குருவாணை ஓலை நாயகமாக** நிலையான பதவியில் நியமித்திட்டார். இவற்றையெல்லாம் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக.

15. தங்களைப் போன்று முன்னணியில் உள்ள சன்னிதானங்களாவது தங்களுடைய திரு அருட்குடும்பத்துடன் அடிக்கடி நான்கு யுக நாயகமான எம்மைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றுக் கொள்வது நல்லது, நல்லது, நல்லது. விரிவஞ்சி இத்துடன் அஞ்சலை நிறைவு செய்கிறோம். உடன் விரிவான பதில் அஞ்சல் எழுதுக.

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்**
**திருவாய் மலர்ந்தருள;**

**அருள்மிகு குருமாரியம்மன் சன்னிதானம்**
**சித்தரடியான் இரா.சீனிவாசன்.**

**குறிப்பு:-** தாங்கள் இதற்கு அழகான கையெழுத்தில் நகல் தயாரித்து நூலகக் கோப்பில் சேர்க்கவும்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.**
**யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# இந்துமதக் கோயில்களின் நிலை!

“பொய்யான ஹிந்துமதத்தால்தான் மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடியான மந்திரிக்கும் கலைகள், பரிகாரம் செய்யும் கலைகள், இந்துவேத நூல்கள், இந்துமத நூல்கள் ... முதலியவற்றைச் செயலாக்கப் புறப்பட்டிருக்கும் நமக்கு நம்முடைய கோயில்களுக்குள்ளேயே வரவேற்பில்லை. அதாவது, நமது கோயில்களின் பூசாறிகளும், பூசைமொழிகளும் அன்னியர்களின் கைகளிலேயே இருக்கின்றன; அன்னியர்களின் அடிமைகளின் கைகளிலேயே இருக்கின்றன. இதனால்தான், நமது சன்னிதானங்கள் நம்முடைய கோயில்களுக்குள் சென்று பூசைமொழி வாசகங்களை ஓதவோ, பொதுமக்களுக்கு மந்திரித்து அருள் வழங்கவோ, அருள்வாக்கு சொல்லவோ, அருட்கணிப்புச் சொல்லவோ, பரிகாரங்கள் சொல்லவோ, அருளுரை ஆற்றவோ முழுமையாகத் தடை விதிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், நாம் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அந்த கோயில் பூசாறிகளும், நிர்வாகிகளும் நம்மைப் பார்த்ததுமே நமக்கு எதிர்ப்பும், மறுப்பும், வெறுப்பும் தெரிவிப்பவர்களாகவே மாறிவிடுகிறார்கள். இதை மாற்றுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியாது, தெரியாது, தெரியாது.”

**//25-08-1992இல் குருதேவர் எழுதிய ஒரு நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையில் இருந்த ஒரு பத்தி.//**





மெய்ஞ்ஞானக்கொடி



**11வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

சீவலிங்கக் கொடி:- ஆவி + ஆன்மா + ஆருயிர் = சீவன். இந்தச் சீவனின் இயக்கமாக அல்லது விளக்கமாக உருவானதுதான் இந்தச் சீவலிங்கக் கொடி. எனவே, பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்தை விளக்குகின்ற, குறிக்கின்ற கொடி இந்த மெய்ஞ்ஞானக்கொடிதான்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the
Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

**காணிக்கை: ரூ.10/-**